

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், மக்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.06.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ திட்டஇயக்குநர் தமிழ்நாடு வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் தென்காசி சு. ஜவகர், நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, நீர்வளத்துறை அரசு சிறப்பு செயலாளர் கா.முருகன், நீர்வளத் துறை காவேரி தொழில் நுட்ப குழுமத்தின் தலைவர் ஆர்.சுப்ரமணியன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கு.அசோகன் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

# ஜூன் 15-ல் கோவையில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர், ஜூன் 14-

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம் புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# கோவை முப்பெரும் விழாவிற்கு அலைகடலெனத் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஜூன் 14-

நாடே வியக்கும் வகையில் வரும் 15ஆம் தேதி கோவையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் மாபெரும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக, அலை கடலென திரண்டு பங்கேற்கு மாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாளை (15.06.2024 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாபெரும் முப்பெரும் விழா பொதுக்கூட்டம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் இந்தியாவே போற்றும் வகையில் 40க்கு 40 என நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த பொது மக்களுக்கு நன்றி பாராட்டுதல், தேர்தல் வியூகம் மற்றும் மாபெரும் சாதனைக்காக அயராது பாடுபட்டு மக்கள் மனதில் சாதனை நாயகன் என புகழ் பெற்று வெற்றிக்கு பாடுபட்ட கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க முப்பெரும் விழாவில் மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் என அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### விக்கிரவாண்டி தொகுதி

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவா அறிமுகம் - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஜூன் 14-

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோரின் தலைமையில் நமது வேட்பாளர் அன்னியூர் அ.சிவா அறிமுகக் கூட்டமும் , இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டமும் இன்று (14.06.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணிக்கு விக்கிரவாண்டி சென்னை நெடுஞ்சாலையில் உள்ள அப்துல் சலாம் ரைஸ் மில் வளாகத்தில் தேர்தல் பொறுப்பாளர்கள் - கழக முதன்மைச் செயலாளர்-அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் , அர.சக்கரபாணி, தா.மோ.அன்பரசன், எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வி.கணேசன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் டாக்டர் ஆர்.இலட்சுமணன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுசமயம் இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தோழர்கள் என அனைவரும் பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

# ஜூன் 15-ல் கோவையில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப. ராணி வேண்டுகோள்

சென்னை, ஜூன் 14-

கழக மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாளை (ஜூன் 15ஆம் தேதி) மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித்தலைவர்களும் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என “முப்பெரும் விழா” பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சிக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், கழக மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



தேனி மாவட்டம்போடிநாயக்கனூர் 19 வது பகுதி நகர்மன்ற உறுப்பினரும் நகர துணைச் செயலாளருமான எஸ். வெங்கடேஷ்குமார் ஏற்பாட்டில் இரண்டு சலவை தொழிலாளர்களுக்கு தேய்ப்பு பெட்டியை தேனி நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார் உடன் நகர் கழக செயலாளர் புருஷோத்தமன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

